# விக்கினாமுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா செட்டிகுளத்தைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் தற்காலிகமாக இல.29, D10
உருத்திரபுரப் பகுதியில் வசித்து வந்தவருமாகிய

## கூட்டுறவாளர்
## அமரர்
## தர்மலிங்கம் விக்கினேஸ்வரராசா
## (சமாதான நீதவான்)

# அவர்களின் சிவபதப்பேறு குறித்த
# 31ஆம் நாள் நினைவு மலர்

# 2018.05.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்




எமது குடும்பத்திற்கு மட்டுமல்லாது
எமது பிரதேசத்து உறவுகளுக்கும்
வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும்
சமாதான நீதவானாகவும்
சமூக செயற்பாட்டாளராகவும் சமயப்
பணியாளராகவும் சிறந்த கூட்டுறவாளராகவும்
தமிழ்த் தேசியக் கொள்கை பற்றுடையவராகவும்
கலை இலக்கியம் விளையாட்டு என
சகல துறைகளையும் கற்று அறிந்த
மற்றவருக்கும் போதித்து வாழ்ந்த
எம் அன்புத் தெய்வத்தின் பாதடிகளில்
அன்னாரின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வில்
"விக்கினாமுதம்" எனும் நினைவு மலரை
சமர்ப்பணம் செய்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தோற்றம்**
**1959.12.14**

**மறைவு**
**2018.04.27**

**கூட்டுறவாளர்**

**அமரர்**

# தர்மலிங்கம் விக்னேஸ்வரராசா

ஆண்டாகும் நல்விளம்பி சித்திரை நாள்
பூண்டதிதி திரயோதசி புவியைவிட்டு – காண்பரிய
தர்மலிங்கம் விக்கினேஸ்வரராசா பரமனடி
கண்டார் விதிப்படியே காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்



## விநாயகர் துதி

பிடியதனுருவுமை கொள மிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

# பஞ்ச தோத்திரம்

## தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே நற் சோதி மிக்க
உருவே யென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடு நண்டுறையுறையு மமரரேறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற்
காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக்
கடலாய் வெள்ளத்தே

# திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந் துன்று
பொற்குழற் றிருச் சடையும்
திவள மாளிகை சூழ் தரு தில்லையுட்
திரு நடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு எமன் மனந்
தழன் மெழு கொக்கின்றதே

# திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
ஆணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியுமாடியும்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

சிவனடியே சிந்திக்குத் திருப் பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தர முணர்ந்தார் அந்நிலையில்

# திருப்புகழ்

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் கானநிலைப் பொருளோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானை முகப் பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

1959ம் ஆண்டு மார்கழி மாதம் 14ம் திகதி தர்மலிங்கம் பார்வதிப்பிள்ளை தம்பதிகளுக்கு இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த விக்கினேஸ்வரராஜா அக்குடும்பத்தின் மூத்த ஆண் பிள்ளையாவான். சிறுவதில் இருந்து அழகிய தோற்றமும் துடுக்குத்தனம் மிக்கவனாக தாய் தந்தையின் பெறுமதிமிக்க சொத்தாக காணப்பட்டான். பேரன், பேர்த்தியின் அரவணைப்புடன் அவர்களின் அருமைக்குரிய ரேனாகவும் வளர்ந்து வந்தான். இயல்பாக தந்தையிடமிருந்து பல ஆளுமைப் பண்புகள் சிறுவயதிலேயே வெளியிடப்பட்டது. பாரம் பரியத்திற்கும் பல்வேறு பண்பாட்டு அம்சங்களுக்கும் பெயர்போன மரகதத் தீவாம் நெடுந்தீவு மண்ணிற்கே உரித்தான துணிச்சலும் விவேகமும் குடி கொண்டவனாக ஆரம்பக் கல்விக்குள் கால்பதித்தான். அன்றைய அதிபரும் தனது பேரனுமான அமரர் சோமசுந்தரம் அவர்களின் அன்புக்குரிய மாணவனாக முகத்தான்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையினுள் தனித்துவமாக வலம் வந்தான். தனது வீட்டின் வேலியோடே பாடசாலை இருந்ததால் பாடசாலையின் சகல சாவிகளையும் பாதுகாத்து பாடசாலையினை மழலைப் பருவத்திலேயே தலமை தாங்கினான்.

1969ம் ஆண்டு தேசிய ரீதியில் நடைபெற்ற பழமரங்களைக் கொண்ட பாடசாலை என்ற போட்டியில் முதலாம் இடத்தை அநதச் சிறிய பாடசாலை தனதாக்கிக் கொண்டதுடன் அதே பாடசாலை 1970ஆம் ஆண்டு விவசாய வினாடிவினாப் போட்டியில் முதலிடத்தைப் பெறுவதற்கும் விக்கி என்ற விக்கினேஸ்வரராஜா முக்கிய பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ஆம் ஆண்டு தனது 12 ஆவது வயதில் செட்டிகுளம் என்ற அழகிய விவசாயக் கிராமம் செல்வம் கொழித்துக் கொண்டிருந்தது. தொழிநுட்ப வசிதிகள் எதுவும் அற்ற அந்த ஊரில் தனது தந்தையினால் முதன் முதல் கொண்டுவரப்பட்ட உழவு இயந்திரத்தை யாரும் இல்லாத நேரம் தானாக இயக்கி 2 கிலோமீற்றர்கள் தூரம் இதனை ஓட்டியமையின் மூலம் ஊர் மக்கள் அனைவரிடத்திலும் பாராட்டைப் பெற்றார்.

தான் வளர்ந்து வரும் காலத்தில் எந்த விதமான கஸ்டத்தையும் காணாமல் செல்வச் செழிப்போடு வாழ்ந்ததுடன் தந்தையின் அரசியல் ஈடுபாடு சமூகமட்டத் தலமைத்துவம் என்பவற்றினால் கவரப்பட்டார். அன்றைய தேசிய தராதரப் பத்திரம் என்ற பரீட்சையில் உயர் தகமையைப் பெற்று கல்வியில் நல்ல ஈடுபாடு காட்டி வந்தார்.

குடும்பத்தில் 8 பிள்ளைகள் என்பதுடன் 5 ஆண் பிள்ளைகளில் மூத்தவனாக ஊருக்குள் வலம் வந்தார். அக் கால வாழ்வியல் முறைக்கேற்ப கருக்குடும்பமாக இல்லாமல் விரி குடும்பத்தையும் தாண்டி சமுதாயமாக வாழ்ந்த ஒரு நிலை காணப்பட்டது. நான்கு மாமாக்களும், இரண்டு பெரியம்மாக்கள், மூன்று மாமிகள், ஒரு பெரியப்பா, ஒரு சித்தப்பா என்று விரிகுடும்பம் விருட்சமாக இருந்தது. அத்தனை குடும்பங்களிற்கும் விக்கி ஒரு அன்புக் குழந்தையாக வலம் வந்தார். இது அவரது இளமைப் பருவத்திற்கு முன்னைய பருவம்.

1978 விக்கியின் மகிழ்ச்சிக்கும் ஆனந்தக் கொண்டாட்டங்களுக்கும் விடைகிடைத்த ஆண்டு எத்தனை வரவுகளுக்குச் சொந்தக்காரனாக இருந்தாலும் தனது மூச்சாக எண்ணியிருந்த அன்புத்தாயின் நோய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமையில் துவண்டு போனான். தனது அத்தனை சுகபோகங்களையும் மறந்தான். தந்தையின் சொல்கேட்டு தாயாரின் நோயினைக் குணப்படுத்தி விடலாம் என்ற ஒரே எண்ணத்தோடு குடும்பதின் சொத்து சுகங்கள் அத்தனையையும் இளப்பதற்கு தயாராகினான். இரண்டு வருடங்களிற்குள் அத்தனையும் நடந்தாகியது. குடும்பத்தில் சொத்துக்களும் இல்லை. சொத்தாக நினைத்த அன்னையும் இல்லை குடும்பம் வீதிக்கு வந்தது. "அம்மா இறக்கப்போகிறார் நாங்கள் அதனை ஏற்றேதான் ஆகவேண்டும். எமக்கு கீழே உள்ள ஆறு தம்பி, தங்கைகளையும் வாழ வைக்க வேண்டும். எங்கள் ஐயா அம்மாவின் பிரிவால் துவண்டு விட்டார். ஆகவே பொறுப்பை நாங்கள் ஏற்க வேண்டும்" என்பது நிதர்சன உண்மையைத் தனது மூத்த சகோதரிக்குக் கூறிய விக்கி குடும்பத்தைக் காக்க திடசங்கர்ப்பம் கொண்டான். தயாரின் மரணப்படுக்கையில் இருந்து அவரது வாயில் இருந்து வந்த வார்த்தைகளை 1978ஆம் ஆண்டில் ஒலிப்பதிவு செய்த தீர்க்க தரிசனம் அவனைத் தவிர யாருக்கும் வராது.

விக்கியின் வாழ்வில் சோதனைக் காலமானாலும் அதுவே மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு தான் ஒரு சந்ததியின் வளர்ச்சிக்கு தலைவன் என்ற உணர்வை கொடுத்த காலம்7 சகோதரர்களையும் கண்ணை இனை காத்தது போல் காத்தான்.

தன் வியர்வையையும் உதிரத்தையும் சிந்தி அக்கா, இரண்டு தங்கைகள் நான்கு தம்பிகளையும் ஆளாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் வயதில் செட்டிகுளம் தபால் நிலையத்தில் தற்காலிக பணியாளராகவும் பின்னாளில் செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலக பணியாளர், முகாமையாளர், கணக்குப்பதிவாளர் என பல பொறுப்புகளில் சிறப்பாக செயற்பட்டு தன் தனித் திறமையினால் சிறந்த பணியாளராக தன்னை அடையாளப்படுத்தினார்.

படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் வாழைத்தோட்டம் ஒன்றை அரசிடமிருந்து பெற்றுக் கொண்டு தன்னை மட்டுமன்றி தனது நண்பர்களையும் வளமாக்கிய பெருமை விக்கியை சாரும். 1983 அவரது வாழ்வில் பெற்றோர் பெரியோரின் விருப்பப்படி உருத்திரபுரம் என்னும் பாரம்பரிய விசாயக் கிராமத்தில் புஸ்பலீலா என்ற உறவுப் பெண்ணை மணம் முடித்து நல்லறம் கண்டார். அவர்களது வாழ்வின் ஆரம்பம் புத்துயிர் குலுங்கிய போது இலங்கை இராணுவத்தால் தேடப்பட்டார். அதிலிருந்து சாதுரியமாய் தப்பிக் கொண்டவேளை மூத்த மகன் பிறந்தான். தன்னைக் காப்பாற்றிய முறுகண்டிப் பிள்ளையாரிற்கு நன்றி செலுத்தும் முகமாக தனது தலைமகனுக்கு முறுகண்டிப் பிள்ளையாரின் மகன் என்பதைச் சுருக்கி முபிள்சன் (Sun) என்று பெயரிட்டார்.

காலங்கள் உருண்டோடி இரண்டு பெண்பிள்ளைகளும் கடைக்குட்டியாக ஆண் பிள்ளை ஒன்றும் என நான்கு பிள்ளைகளையும் பெற்றெடுத்து உருத்திரபுரம் சிவநகர் எனும் ஊரில் நல்லறமாக இல்லறம் நடத்தி வந்தார். அத்தோடு தான் வாழவந்த ஊரில் சமூகப்பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு சிற்றூர் சபையூடாகவும் சிவநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாகவும் பல சேவைகளை செய்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வெளிநாடு செல்லும் பொருட்டு ஊரை விட்டு கொழும்பு சென்று முயற்சிகள் மேற்கொண்ட போது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் மீண்டு 1993ஆம் ஆண்டு தன் சொந்த ஊரான செட்டிகுளம் சென்று குடியேறி வாழ எண்ணிய போது அன்நாளில் செட்டிகுளம் மக்கள் இடம்பெயர்ந்து மடு தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த காலம் அப்போது குறிப்பிட்ட சிலரே அங்கு வசித்து வந்தனர். அவர்களோடு தன் குடும்பத்தில் முதல் மூன்று பிள்ளைகள் மனைவியோடு முகத்தான்குளத்தில் தற்காலிகமாக வசித்து வந்தார். இராணுவத்தின் அடக்கு முறைக்கு மத்தியில் வாழ வேண்டிய சூழல் காணப்பட்டாலும் தற்துணிவோடு செயற்பட்டு குடும்பத்தை வழிநடத்தி வந்தார்.

அப்போது அரசாங்கத்தால் முதலியார்குளம் வீடமைப்புத் திட்டத்தில் அங்கிருந்தவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்ட போது இல.263 என்ற வீட்டில் குடியேறி வாழ்ந்து வந்தார். அங்கிருந்து விக்கியினுடைய வாழ்வியல் சமூக, சமய, கூட்டுறவுப் பணிகளோடு குடும்ப முன்னேற்றத்துக்குமானதாக மாறத்தொடங்கியது.

1996ஆம் ஆண்டு செட்டிகுளம் பிரதேசத்தின் முதன்மை கிராமமான முகத்தான்குளம் கிராமத்தின் விநாயகப் பெருமான் மீது உள்ள பக்தியின் காரணமாக முகத்தான்குளம் ஸ்ரீ சித்த விக்கினேஸ்வரர் ஆலயத்தின் தலைவராக பொறுப்பேற்று ஆலயத்தை பரிபாலனம் செய்து வந்தார். 1997.06.07 அன்று தன்னுடைய கடைசித் தம்பியான ஸ்ரீசெந்தில்நாதன் ஜெயசீலனாக ஈழவிடியலிற்காக வீரகாவியமானான் என்ற செய்தி கேட்டு துயரடைந்தார். இருப்பினும் தன்னுடைய மனதை தேற்றி தன்னுடைய சமூக சமயப் பணிகளை சிறப்பாக செய்து கொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி தான் தலைவராக இருந்த ஸ்ரீ சித்தி விக்கினேஸ்வரர் ஆலயத்தை பாலஸ்தானம் செய்து தற்போது இருக்கின்ற இடத்தில் ஆலயத்தை அமைப்பதற்கு அரும்பாடுபட்டு உழைத்து பல அரசியல் தலைவர்களின் பங்களிப்புகளை உபயங்களாக வரவழைத்து 1999 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இரண்டாம் திகதி கும்பாபிஷேகம் செய்து வைத்தார்.

தாம் சார்ந்த மக்களின் வாழ்வியலை முன்னேற்றும் பொருட்டு அரசியல் தலைவர்களின் வரப்பிரசாதங்களை தன் ஊர்மக்களுக்கு பல வளிகளிலும் பெற்றுக் கொடுத்தார். அதன் படி ஒரே தடவையில் பல அரச வேலைவாய்ப்புக்கள் இவரின் சிபார்சின் அடிப்படையில் இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்பட்டது. அத்தோடு பாடசாலை, வைத்தியசாலை போன்ற சமூகத்துக்கு முக்கியமானவைகளுக்கு தேவையான வசதிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

அத்தோடு தன் குடும்ப வாழ்வில் சிறப்பாகவும் பிள்ளைகளின் கல்வியையும், பண்புகளையும் வளர்க்க வேண்டும் எனும் நோக்கோடு வளர்த்து வந்த வேளை மூத்தமகனை ஒரு வைத்தியராக ஆக்க வேண்டி பாடுபட்டு வந்தார். அவரின் எண்ணம் போல் கல்வியில் சிறந்தவனாக உயர்கல்வியை சிறப்பாக கற்று வந்த மகன் தந்தைக்கு இணையான பண்புகளோடு சமூக அக்கறை கொண்டவராகவும் தாயக மண்ணில் பற்றுக் கொண்டவராகவும் வளர்ந்து வந்தார். 2002ஆம் ஆண்டு தந்தையின் கனவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தாயக விடுதலைக்காக தமிழர் சேனையில் இணைந்து கொண்டான். மகன் தந்த ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ளாமல் இருந்தவர் தன் ஏனைய பிள்ளைகளை கண்ணியத்தோடு வளர்த்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 ஆம் ஆண்டு ஆறாம் மாதம் இருபத்தியாறறாம் திகதி தன் தம்பியின் நாமம் சூட்டிக் கொண்ட மகனும் இறுதிச்சமரில் தேசவிடியலுக்காக போராடி வீரகாவியமான செய்தி கேட்டு மீளமுடியாத் துயரடைந்தார். இருப்பினும் தன் தன்னம்பிக்கையை இழக்காதவராக தன்னுடைய சமூகப் பணிகளையும் தொடர்ந்து செய்து வந்தார்.

2009ஆம் ஆண்டு தன் உறவுகள் முள்ளிவாய்க்காலில் முற்றையும் இழந்து தன் ஊரில் தங்க வைக்கப்பட்டிருந்த வேளை அவர்களுக்கு அன்பு காட்டி அடைக்கலம் கொடுத்து அரவணைத்து வந்தார்.

தொடர்ந்து தான் பணியாளராகவும் தலைவராகவும் இருந்த செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளராக மீண்டும் கூட்டுறவுப் பணியில் தன்னை இணைத்துச் செயற்பட்டு வந்தார். பின்னாளில் சங்கத் தலைவராகவும் மாவட்ட கூட்டுறவுச் சபை, தேசிய கூட்டுறவுச் சபை என்பவற்றிலும் ஈடுபாட்டோடு அங்கத்தவராக பணியாற்றி கூட்டுறவுத் துறையில் அக்கறை கொண்டு செயற்பட்டார்.

2014இல் தன்னுடைய பிள்ளைகளில் இருவருக்கு எண்ணம் போல் திருமணம் செய்து வைத்து 2015இல் தன் ஆசை மகனை பெற்ற போது அடைந்த ஆனந்தத்தை தன்னுடைய முதல் பேரப்பிள்ளை கண்டு அடைந்தார். அதே ஆண்டில் வெளிநாட்டில் (போலந்தில்) மற்றொரு பேரப்பிள்ளையும் பிறந்த போது ஆனந்தமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால ஓட்டத்தில் மீண்டும் செட்டிகுளத்திலிருந்து தன்னுடைய மனைவியின் சொந்த ஊரில் உள்ள ஆதனங்களை பராமரித்து தன் சந்ததிக்கு கையளிக்கவென உருத்திரபுரம் கிராமத்தில் தன் இளைய மகள், இளைய மகன், பேரப்பிள்ளைகள் என ஒன்றித்த வாழ்வு வாழ்ந்து தன் மகளுக்கும் தன் விருப்பம் போல் மணம் முடித்து வைத்தார். அவரின் அன்பிற்குரிய மாமனாரான (மனைவியின் பெரியப்பா) அம்பலவாணர் அவர்களின் பெயரால் (அம்பலவாணர் பல்பொருள் வணிகம்) எனும் வியாபார நிலையத்தை ஆரம்பித்து தன் குடும்பத்தோடும் தன் பேரப்பிள்ளைகளோடும் தன் வாழ்வில் சகலதையும் சாதித்து காட்டியவராகவும் அனைவருக்கும் உதாரண புருசராகவும் வாழ்ந்து வருகின்ற காலத்தில் குணப்படுத்த முடியாத கொடிய நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு 27.05.2018 அன்று காலன் செய்த விதியால் இறைவனடி சேர்ந்தார்.

***ஓம் சாந்தி சாந்தி சாந்தி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

என்னவனே மன்னவனே
எந்தன் உயிர்க் காவலனே
கண் அவனே (கணவனே) - உன்
கடமை முடிந்தென்றா காலனுடன்
நீ சென்றாய்

என் சொந்தமும் நீதானே
என் சொர்கமும் நீதானே
பந்தமும் நீதானே - எனக்கு
பரமனும் நீதானே

மலையாய் உன் துணை
இருந்தபோதும்
மற்றவர் பேச்சை ஒரு பொருட்டாக
மதித்ததில்லை இறுமாப்பும்
குறையவில்லை
துடுப்பில்லா படகினைப்போல்
சிறகுடைந்த பறவை போல்
துடிக்கின்றதே என் இதயம்
தயவு காட்டத்தான்
துணை நீங்கள் இல்லையே
தேடற்கரிய பொக்கியசமாய்
தலைமகனைத் தொலைத்தபோதும்
இப்படியோர் வெறுமை என்னுள்
இருக்கவில்லை
உலகமே இருளாக மாறி விட்டதோ
பிள்ளைகளின் கடமை முடிந்ததால்
பேதை என்னை தனியாக தவிக்க விட்டீர்
கரடு முரடான பாதையிலும்
கடும்பனி இடிமின்னல் மழையிலும்
இடர்கள் பலரையும் இணைந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகித்த நாங்கள் தங்கள் சாவினில்
பிரியும் நிலை வந்ததுவே
பதினெட்டு நாள் தவமும் பலிக்காமல்
போனதுவே
பாவிமகள் குரலும் பாளும் தெய்வம்
காதில் பதியாமல் போனதுவே
கணப்பொழுதில் என்வாழ்வு
கதியற்று போனதுவே

## மூத்த மகளின் உள்ளிருந்து வெம்பும் சில துளிகள்

அறிவாற்றல் தந்து ஆளாக்கிய அப்பாவே
பாசம் பிசைந்து ஊட்டி வளர்த்தீர்
ஆளுமை தற்துணிவு என
நீங்கள் நிமிர்ந்து நின்ற சுவடுகளில்
நாமும் எழுந்து நின்றோம்.
திருமண வாழ்வுதனை சொந்தம் தேடி
அமைத்து தந்து "இல்லற வாழ்வினை இனிதே நடத்திவிடு"
என்ற ஆசியுடன்
இன்னுமோர் நாட்டிற்கு
இன்பமாய் அனுப்பி வைத்தீர்
இனி எங்கே காணப்போகிறேன் என்ற
எண்ணம் எனக்கில்லையே அன்று
நான் பெற்ற செல்வத்தின்
ஓராவது அகவைக்கென
நீர் தீட்டிய வாழ்த்தின் ஒவ்வொரு
வரி அர்த்தங்களையும்
இன்றைய நாளில் உணர்ந்து கொள்கிறேன்
சுகையீன செய்தி அறிந்த
அந்த நிமிடமே என் ஆவி உங்களை
தழுவியதே....
உணர்வுகளால் பக்குவப்படுத்த முயன்றதே
சற்றும் தாமதம் இன்றி புறப்பட்டு
ஓடி வந்தும் உயிர் தாங்கி துடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் உடலை தழுவினேன்
உணர்வின்றி இருந்த தங்கள் மேனி
அன்றுதான் உணர்ந்ததாம்
உடல் அசைந்து புருவம் அசைந்து
உள்ளிருந்த உம் உணர்வை
கண்வளியே கண்ணீராய் கசிய விட்டீர்
காலன் காவல் இருந்து கவர்ந்து செல்ல
போவதை உணர்ந்தேன் ஐயா!
சில நொடி மாத்திரமே காணும் நேரம்
தந்தாலும் கண்ணசைத்த நினைவோடு
களித்தேன்
பொழுது சாய்ந்து மீண்டும்
சில மணிநேரம் கண் அயர்ந்த காட்சிதனை
காணவந்தேன்
அருகாக நெருங்கி அழைத்தேன்
“அப்பா ஜனா வந்திருக்கிறேன்”
என்றதும் பிரகாசமாக ஒளிர்ந்தது உங்கள்
கண்கள் எத்தனை விடயங்களை கூறியது
நான் வந்ததை உணர்ந்த கதை சொல்லவா?
கதை பேசி மகிழ முடியாத ஏக்கம் தனை சொல்லவா?
கைகளை பற்றிக்கொள் என்று தந்த போது
நான் உணர்ந்த அர்த்தம் எத்தனையோ...
தேடி கிடைக்காத பொக்கிசமே....!
உமை இழந்ததால் வெறுமையானோம்
பெறுமதி தெரியாதோர் சிலர்
பயன் அடைந்தோர் பலர்
அப்பா கடைசி நாட்கள் எண்ணிக்கொண்டே
இருந்தீர்கள் நோயின் ஆதிக்கம்
அதிகமாக இருந்த போதும்
உயிர் தொட்டபடியே வருந்தினீர்கள்
தர்மமது விடாது பற்றிக்கொண்டதுவே
தசைகளுக்குள் பூட்டி இருந்த
உயிரை காலன் கொண்டு சென்ற
செய்தி என் செவிகளில்
இடியாக ஒலித்தது மீண்டும்
ஒரு ஜென்மம் அதில் நம்பிக்கை
கொண்டு இறைவா.......!!!

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

அன்பு மகள்: ல.முபிள்ஜனா
(போலாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய மகளின் உள்ளிருந்து வெம்பும் சில துளிகள்

"அப்பா" அறிவிற்கு அடையாளமானவரே
அன்பின் பிறப்பிடமானவரே - நாம்
ஆறாத துயரத்தில் ஆழ்ந்து போனகதை
தங்களின் இறுதிப் பயணத்தின் ஆரம்பம்

விடாத காச்சல் மூன்றே நாள் - அது
தங்களின் உயிரை எடுப்பதற்கு என்று.....
"தொண்டை நோ உணவு உண்ண ஏலாது"
"ஒரு தடவை சாப்பிடுங்கள்" என்று
இடியப்பம் பிசைந்து தருகையில்
"ஆ" என்று வாங்கி விழுங்க முடியாமல் நொந்தீர்கள்
சாப்பிடாமல் நிறுத்திவிட்டு அம்மா
ஊட்டும் அற்புதக் கதை கூறினீர்கள்

வைத்தியசாலை சென்றுவிட்டால்
குணமாகும் என நம்பிக்கை கொண்டு
பசி பொறுத்தீர்
"ஞாயிறு" விடியலின் ஆரம்பம் என்பர்
உங்களை சுகப்படுத்தவென அழைத்துச் சென்றேன்
உள்ளிருந்து உயிர் உருக்கி அந் நோயின்
அடையாளம் தெரியாத நான்
சோதித்து பாருங்கள் ஐயா!
என்று கூறி கண்கலங்கி நின்றேன்
இறைவா என் அப்பாவை குணப்படுத்து என்றபடி
வைத்தியசாலை வாசலில் நின்றிருந்து
அம்மாவின் பதற்றத்தை தணித்து கொண்டேன்

நாளை நாளை என்று நாட்கள் நகர
"நிலமை மோசம்" என்று நம்பிக்கை
தளர்ந்து போனது
மூச்சுவிடமுடியாமல் நீங்கள் துடித்தது
நெஞ்சை உருக்கியது
பேச்சின்றி மூச்சின்றி நீங்கள் கிடந்த
கோலம் ஐயகோ சொற்களில் வரைந்து விட
முடியுமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் நிலைப்பாட்டை
அறிந்து வேரறுந்த மரம் போல சரிந்து போனோம்
தாய் பதறிய பதறலுக்கு எங்கணம் ஆறுதல் சொல்ல
தேடிய செல்வம் கண் எதிரே கவர்ந்தது போல்
காலனவன் உங்கள் உயிரை கவர வந்தான்
உன் உயிரை பத்திரப்படுத்த வழிதேடித் தவித்தோம்
ஆண்டவனின் அற்புதங்களில் ஒன்றேனும்
நிகழாதா? என்று தொழுதோம்
வைத்தியசாலை தெருவிலே மணிக்கணக்கில் நின்று
மண்றாடியும் மனம் இரங்காத தெய்வம்
"மரணம்" என்ற சொல்லில் ஆண்மாவை
கவர்ந்திட கணக்கிட்டு கொண்டது
இருபத்தேழு ஐந்து இரண்டாயிரத்து பதினெட்டு
நள்ளிரவு பத்து முப்பத்தெட்டு முற்றுப்புள்ளி இட்டது
தாயின் கருவறையில் இருந்து மண்ணுலகை
தொட்டு தாங்கள் நிகழ்த்திய சாதனை இந்த
சமூகம் அறிந்ததே ஐயா!

பண்பான மாணவனாக பயின்ற கல்வி
பாரில் பல கல்விமான்களையும் செல்வந்தர்களையும்
உருவாக்கியது
அரசியல் கலை இலக்கியம் கலாசார நிகழ்வு
நீதி நெறி என கால்பதிக்காத விடயம் எது?
"ஸ்ரீ சித்தி விக்கினேஸ்வரா" என்று உருகி
வழிபட்ட தெய்வத்தின் அமைவிடத்தை
நிர்ணயித்து "அவன் அருளாலே அவன்
தாழ் வணங்கி" ஆலயப்பணிகளையும் ஏந்தி
முன் உதாரண புருசராக வாழ்ந்து
வாழ்க்கையின் தத்துவத்தை எமக்கு
உணர்த்தி சென்றீர்கள்

காலன் வந்து அழைக்கையில் கடமை கூறி
காலம் கடத்த முடியாது என்ற விடயத்தை
எனக்கு விளையாட்டாக உரைப்பீர்கள் அதன்
உண்மை உணர்த்தும் தங்கள் பிரிவினை
ஏற்காத மனம் உம் ஆவி தேடி அலைவதை அறிவீர்களா

ஆசைமகள்: பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரிசின் வரிகள்

என் அப்பாவையா நான் இழந்தேன் - இல்லை
அத்தனையும் நான் இழந்தேன்
வித்தெனவே அண்ணன் - தேச
விடியலுக்காய் வீழ்ந்த போது
தனித்து நின்ற எனக்கு - மீண்டும்
பத்தாண்டுகள் கடந்து இடியொன்று வீழ்ந்ததுவே
கற்று நான் உயர பல கஸ்ரங்கள் பட்டீர்
அரும்பிய வயதில் தடம் மாறி போகாமல்
அவதானமாய் என்னை வளர்த்தீர்
சவால்களை சமாளிக்கும் சாமர்த்தியம்
கற்றுத்தந்தீர் - விரும்பிய
கரம் இணைத்து வைத்து அன்புடனே ஆசி தந்தீர்
என் அரும்புகள் இரண்டிற்கும் அளவற்ற
அன்பை அள்ளி அள்ளி தான் கொடுத்தீர்

நுன்னறிவாளன் நூதனப் பேச்சாளன்
விட்டதென்று எதுவுமின்றி - அத்தனை
துறைகளையும் தொட்டு சாதித்த சாதனையாளன்
வெட்டிப்பேச்சில்லை உங்களிடம்
அத்தனை சொல்லிலும் ஆயிரம் அர்த்தங்கள்
அரசறிவியலதில் தாடி முதல் மோடி வரை
தேடியே நீர் கற்று அனுபவத்தை எமக்களித்தீர்
சமவுடமை சுயாட்சி சுயநிர்ணயம் என அத்தனையும்
அக்குவேராய் விளங்கி கொண்டீர்
கூட்டுறவுத் துறையதில் பணியாளராகவும்
பணிப்பாளராகவும் அத்தனை பரிநாமத்திலும் சாதித்தீர்
அனுபவங்களை அடுத்தவர்க்கும் போதித்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை பக்தியுடன் சமய நெறியில் நின்று
மக்களை திரட்டி விக்கினேஸ்வரப் பெருமானுக்கு
பதியமைத்து தொண்டு செய்து - புலவனை
அழைத்து புகழ் மாலை சூட்டி வைத்தீர்
சமயவாதம் சரித்திரம் சம்பிரதாயம்
சானக்கியம் அத்தனையும் அறிந்தவர் நீர்

செல்லெடுத்துப் பேசவும் - ஆறாம்
விரலெடுத்து கவி மொழி கோர்க்கவும்
கலைத்துறையில் வல்லவர்
வணிக நுணுக்கங்களும் வேளான்மை நுன்
அறிவுகளும் கணக்கீடும் கணிதமும் என
அத்தனையும் அனுபவத்தில் கற்றறிந்தவர்
பள்ளி மண்று முதல் பாராளுமன்றம் தொட்டு
ஜநாசபை வரை அத்தனை அதிகாரங்களையும்
அக்குவேராய் அளந்து வைத்து அறிந்தவர் தாம்
அடுத்தவர் மேலேற ஏணிப்படியாகி உழைத்தவர்
தனக்கென்று இல்லாமல் நம்பிய அன்பருக்காய்
தன்னையே உருக்கி உதவிய உத்தமன்

துள்ளித்திரிந்த என்னை அள்ளி அணைத்த உங்கள்
வெள்ளியுடலுக்கு வெறும் கொள்ளி வைத்த
கொடியவனாய்
வேதனை உள்ளிருக்க உங்கள்
சாதனைகள் கண்டு தேறி
உங்கள் போதனை வழி நடக்க என்றும் துணை
இருப்பீராக.

**உங்கள் இழப்பில் சகலதையும் இழந்தவனாய்**
**இளைய மகன் - வி. முபிள்ஜான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையின் குமுறல்

ஐம்பத்தொன்பதில்
எனக்குக் கிடைத்த பொக்கிசமே!
எங்கு சென்றாலும்
என் - எண்ணத்தில்
ஒலிக்கும் செல்வ மகனே!
மூத்தவனாய் பிறந்தாய் - வீட்டிற்கு
முதல்வனாய் இருந்தாய்
ஒளி கொண்ட-உன் விழியால்
ஊரையே கவர்ந்தாய்
விக்கினேஸ்வரராசா உன் நாமம்
விவேகத்தின் அதிபதி
அதன் பொருள்
அத்தனையும் நடந்தது - உன்
அன்னையை இழந்தபோதும் நான்
ஆடி அசைந்த போதும் - நீ
ஆல மரமாகி - குடும்பத்தை
அசையாது தாங்கி நின்றாய்
பெரியவன் - என்று
உனை அழைத்தேன் - நீ
பெரியவனாக வாழ்ந்து வந்தாய்
பத்து வயதில்
பயமின்றிப் பயணிக்க
பாதையில் நின்ற
ரைக்ரரை ஓட்டியவன் - உன்
துணிவான செயல் கண்டு
மெய்சிலிர்த்து நான் நின்றேன்
மெய்ச்சுதல் தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொன்றும் நான்
வெட்டவில்லை
பஞ்ச புத்திரரை
பாசத்துடன் கொண்டிருந்தேன்
விடுதலை வேட்கை கொண்டு
வீரத்துயில் தம்பி கொண்டான்
வீணாகவில்லையென்று - அவன்
பிரிவைத் தாங்கி விட்டேன்
விக்கி - உன் பிரிவோ
பாடாய்ப் படுத்துதையா!
பத்தொன்பது நாட்கள்
பரமனைக் கேட்டதெல்லாம்
பலிக்காமல் போனதையா!
ஐம்பத்தொன்பது ஆண்டுகளாய்
செல்லக் குழந்தை யென்றே
செட்டி நகரில் வாழ்ந்து வந்தாய்
காலன் கவரவென்றா
ஊர் விட்டு நீ வந்தாய்
ஊமைக்காயமாக என்
உதிரம் உறையுதைய்யா!
காவிய நாயகனாய்
காலமெல்லாம் வலம் வரவே
கனவு கண்ட போது - காலன்
அழைத்தானோ!
கலங்குதே என் இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா புலம்பல்

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
என்னுடன் பிறந்த என் உயிர் தம்பியே
பள்ளி பருவம் முதலாய்
என்னுடன் கைகோர்த்தாய்
வாழ்க்கை பயணம் தன்னில்
பல கலைகளும் நீ கற்றாய்
ஐந்து தம்பியர்க்கு அக்கா நானடா
அத் திமிர் தன்னில் தலை நிமிர்ந்து
வந்தனேடா
யார் கண் பட்டதோ கடைக்குட்டி
தம்பியையும் நான் இழந்தேன்
அவ் வேதனை தீர முன் உன் வேதனை
நீ தந்து சென்றாயே என் அன்பு தம்பியே
இளமைக் காலம் தன்னில் அன்னையின்
அரவணைப்பை நாம் இழந்தோம்
இருந்தும் ஒரு கூட்டு கிளிபோல்
நாம் வளந்தோம்
ஐயகோ என் செய்வேன் நான்
காலனவன் விரைந்து நம் கூட்டை
கலைத்தது ஏன்
புத்தி கூர்மையும் அழகும் அறிவும்
அற்புத வரமாய் நீ பெற்றாய்
அன்பு தம்பியே
உன் அன்பு அக்காவை
தவிக்க விட்டு சென்றதேனோ
என் உயிர் இருக்கும் வரை உன்னை
மறவேனடா! உன் கவலையும் தீராதடா
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு அக்கா**
**தனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான அண்ணா...

என் அண்ணா இல்லையிப்போ
எதுவென்று தேறிடுவேன்
சொல்லொணாத் துயரிருத்தி
சோகித்து தினைக்கின்றேன்
கொஞ்சநாள் உன்னோடு
சினேகித்திருக்காமல்
நெஞ்சமெல்லாம் வெப்பத்தால்
நினைவிழந்து தவிக்கின்றேன்

பருவவயதுனக்கு பலநோக்கு கூட்டுறவு
நிறுவன அதிபர் நின் அணைப்பில் சின்னச்
சிறுவன் நான் அம்மாவின் அணைப்புப்போல்
உருவுடைந்த நம் குடும்பம் உன் அணைப்பில் சிலகாலம்
அண்ணா என்றினிக்க அன்புருகிச் சொன்னேனா?
அம்மாவும் போன பின்பு உன் அணைப்புக்குள் நின்றேனா?
நீண்டிருண்ட பொழுதுகளில் நீதான் என்றிருந்தேனா?
நினைவில்லை நின்விரல் பற்றி நின்பின்னாலே நின்றேனா?

பத்தொன்பது தினங்கள் என் அண்ணா நீ
படுத்திருந்தறிந்தேன்
அத்தனை தினங்களிலும் என் குரல் கேட்கத்
தொலைபேசி தேடினாய் என்றறிந்தேன்
தத்துவம், அரசியல் சௌர்வமும் பேசும் உந்தன்
தம்பியின் அன்பைப் புரியாது போனேன்
மொத்தத்தில் முதல்வன என் அண்ணன்
முகவரி இழந்து தவிக்கின்றேன் அண்ணா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைத் துரத்தியொரு
உயர் நோவு வந்ததென்ன
துயரைத் தூவியொரு
சுடு செய்தி வந்ததென்ன
அயர்வைத்தரு நோயின்
அரவணைப்பு வந்ததென்ன
உயர்வான உன்ராதா, பிள்ளைகள், பேரமக்கள்
உயிர்நோக நீ போனதென்ன!

கடுங்குளிரின் உறைபனியில்
நடுங்குகின்ற நேரமெல்லாம்
காலன் உனை அணுகும்
கணப் பொழுதில் உன் துடிப்பை
அருகிருந்து கவனிக்கத்
தவறிவிட்ட தம்பியிவன்
கூனிக்குறுகியுள்ளேன்
எனினும்
என் உயிரணுவும்
சுவாசமும்
உன் அருகிருக்கும்
எப்போதும்
உன் ஆத்ம ஈடேற்றத்துக்காய் பிரார்த்திக்கும்
உன் பிரிவு தாங்க முடியாது
தவிக்கும்
**தம்பி, மைத்துனி, பெறாமக்கள்**
**நாதன்**
**தங்கா**
**ஜெனா**
**வினு**
**லதுசன்**

No.1 Bainheart cres
Scarborduh, Ontario
Canada.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறப்புக்களின் புலம்பல்

முன்னை நாம் செய்த தவத்தின் பலனாக
அன்னையாய் ஒரு அண்ணன் அவதரித்தான்
தன்னையே தந்து எம்மை தாய் போலக் காத்திட்டான்
கண்ணை காக்கும் இமை போல எமைக் காத்தான்

ஓலைப் பாயிலே படுத்துறங்கும் நாட்களிலே
நாளை விடியலுக்காய் நம்பிக்கை வளர்த்திட்டான்
மாலைப் பொழுதுகளில் மனம் மயக்கும் கதைகள் கூறி
காலைச் சுற்றும் துயர் கணப்பொழுதில் போக்கிடுவான்

தாய்க்கு தலைமகனாய் தந்தைக்கு உறுதுணையாய்
வாய்த்த தமையன் அவன் புகழ் சொல்ல வார்த்தை இல்லை
நோய்க்கு மருந்தானான் பசிப்பொழுதில் விருந்தானான்
தாய்க்கு சேயாகி தவித்த போது தாயானான்

வாட்டும் வறுமையிலே வாடாத உந்தன் முகம்
மீட்டும் யாழிவனோ எம் துயரம் போக்கிடும்
நீட்டும் கரம் கொண்டு சோதரரை அரவணைக்க
காட்டும் அன்புக்கினை உலகிலே இனி இல்லையப்பா

பெரியவன் என்று தந்தை பெருமையுடன் அழைக்கும் விதம்
உரிய உம் குணங்களை உவகையுடன் காட்டி நிற்கும்
அரியதொரு முத்தாக அவதரித்த அண்ணனே உன்னை
விரித்த விழி மூடாமல் வியந்து திசை நோக்கிடுவோம்

தாயிழந்த போதும் நாம் தவித்த நாள் நினைவில் இல்லை
நீ இழந்த மூச்சை எண்ணி தவிக்கின்றோம் தினம் நாமே
வாய்ப்பிழந்து புலம்புகின்றோம் வாராயோ அருகினிலே
சேயிழந்த பசுவினைப் போல் பதறுகிறோம் அருகில் வா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி புலம்பல்

உன் மீளாத்துயிலினால் மீளாத்துயருடன் மீட்டிடும் ஓர் மடல்
உன் நினைவுகள் மட்டும் நிரந்தரமாய் எனக்குள்ளே நீண்டிடுது..

அன்னையாய் பல காலம் எம்மை அரவணைத்த அண்ணன் நீ..
ஆளுமையால் ஆசானாகி எமக்கு
ஆற்றல் தந்த அண்ணனும் நீ
இழப்பின் துயர் புரியவைத்து
இறைவனாகி போனதேனோ...

ஈர் நான்கு பேருக்குள்
ஈசனாய் திகழ்ந்தவனே..
உன் இழப்பை ஈடு செய்யும்
உறவு வேறேதுமுண்டோ..

ஊர் போற்றும் உத்தமனாய்
ஊர் காக்க நீ முனைந்தாய்..
எம் எழுவர் பசி தீர்க்க
எமக்காக நீ உழைத்தாய்...
ஏங்கி நின்ற எம்மை எல்லாம்
ஏறிவிட்ட ஏணியானாய்...

ஐம்பதைக் கடந்த போதும் எம்
ஐய்யம் பல தீர்த்து வைத்தாய்
ஒவ்வொரு கதையினிலும்
ஓர் நூறு பொருள் சொல்வாய்..
ஓடி எம் துயர் களைந்த
ஓர் உயிரை இழந்து விட்டோம்

ஔவை போல் மொழி பேசும்
ஔடதத்தை இழந்து விட்டோம்
எஃகு பாய்ந்த நெஞ்சம் போல் கலங்கி நிற்கும் நாம்
எல்லாம் இறை போல உனை எண்ணி இறுதி வரை
தொழுதிடுவோம்...!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தம்பி
கதிர்காமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமனார் புலம்பல்

என்னையா! தம்பி என்ற சொல்லை விட
ஏதும் கூறியதில்லையே
மாமனாராக இருந்த போதும்
தாத்தா என்று அழைப்பீர்
தனியாக தவித்திருந்த காலமதில்
தவறாது பார்க்க வருவீர்
மார்பை பிடித்தபடி வியர்வை மழையில்
இருந்த கோலம் கண்டு பதறி
எட்டாம் வாய்க்கால் கூட்டி
சென்றேன் அன்று மாரடைப்பு
வந்தது என் உயிரை எடுத்தது
உன் உயிரை காப்பாற்று என்று
உருகி வருந்தினேன்
அன்று காப்பாற்றிய இறைவன்
நோய்க்கு மேல் நோய் கூட்டி
உன் உயிரை எடுத்திட்டான்...................

**மாமா**
**சி. ஆறுமுகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகனின் இதய வரிகள்

பாசமிகு மாமா என்கின்ற அப்பா
என் அப்பாவின் விம்பமாக இருந்தீர்
தொழில் ரீதியிலும் அரசியல் அறிவிலும்
உங்களால் பலன் அடைந்தோர் பலர்
அதில் நானும் ஒருவன்
என் குழந்தைகளை காட்டிவிட வேண்டும் என
ஆசையாக அழைத்து வந்தேன்
நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று
அப்பப்பா இல்லாத குழந்தையாக பிறந்து
அம்மப்பா இல்லாத குழந்தைகளாக
வளர விதி செய்தான் இறைவன்
ஆசையாய் ஓடிவந்த பேர்த்திகளை
அரவணைக்கும் கரம் எங்கே போனது?
தங்களுடன் கலந்துரையாடவும் என்
சில காலத்தை களித்திட நினைத்திருந்தேன்
அப்பாவிடம் விட்டு சென்ற அரவணைப்பை
தங்களிடம் உணர நினைத்தேன்
விதி விடவில்லை
என் மனைக்கு அழைக்க வேண்டும் என்று
அடி எடுத்து வைத்தேன் முடியவில்லை
முந்தி கொண்ட விதி முகம் காணமுடியாமல்
செய்து விட்டது ஐயா!
என்ன செய்வேன்.
உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**மருமகன்**
**தி. லலித்குமார்**
**(போலந்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தந்தைக்கு நிகரான என் மாமாவே

நீங்கள் இருக்கிறீர்கள் என நாம் இருந்தோம்
இன்று நின்மதி இழந்து தவிக்கிறோம்
இறுதியில் நீங்கள் கூறிய வார்த்தைகள்
பிள்ளைகள் கவனம்.
மாமா நீங்கள் எங்களுக்கு துணையாக
இருப்பீர்கள் என்று நினைத்தோம் இன்று
அநாதையாக விட்டு சென்று விட்டீர்களே மாமா!
தினமும் மாலைப் பொழுதானால்
மழலை கதை கேட்க பேர்த்திகளிடம் ஓடோடி வருவீர்களே
அப்பப்பா எங்கே எனக் கேட்டாள் என்ன கூறுவேன்
உங்கள் பேர்த்திகளுக்கு மாமா
எங்களில் என்றும்
அன்பும் அக்கறையும் காட்டினீர்களே
காலனிடம் செல்வதற்காக என்று தெரியாமல் போனதுமாமா
உங்கள் மகன் என்ர அப்பா இல்லையே.
என்னை அநாதையாக விட்டுட்டு
போய்விட்டார் என கதறிய போது ஆறுதல் கூற
முடியாமல் தவித்து நின்றேன் எமை தவிக்க விட்டு
சென்று விட்டீர்களே மாமா. இனி உங்கள்
பூ முகம் எப்போது காண்போம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.

மருமகள்
M.தர்மிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை அப்பப்பாவே

அச்சாப்பிள்ளை அப்பப்பாவே
பள்ளிக்கு அழைத்துச் செல்வேன்
பாடம் கற்றுத் தருவேன்
என்று அரவணைத்தீரே
என் மொழியே பொன்மொழியாய்
பேசி மகிழ்ந்து வாழ்ந்தீர்
பட்சனங்கள் வாங்கி வந்து
செல்லமாக கொஞ்சுவீரே
புது ஆடை அணிவித்து
நடை போடும் அழகை ரசிப்பீர்
கோவிலுக்கு அழைத்துச் சென்று
கோண் ஐஸ் வாங்கித் தருவீர்
இனி யார் எமக்குண்டு
இது போலே அன்பு காட்ட
முதல் கண்ட பேர்த்தி என்று
முத்தமழை பொழிந்தீர்
இறுதி நாட்களிலும்
இறுக்கி அணைத்து
உரசினீரே எம்
சின்ன உலகத்தின் சிறப்பே
எங்கே போனீர்கள்
செல்ல அப்பப்பாவே
வந்து இவளை தூக்குங்கோ

**பேர்த்திகள்**
**மு. சஞ்சனாவுடன்**
**மு. சன்சிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்த்தி புலம்பி அழைத்தல்

அம்மப்பா என்று அழைக்க ஓடி வந்தோம்
ஒப்பாரி இட்டு அழைத்திட எங்கே போனீர்
சின்ன நடை நடக்கவும்
சிங்கார பேச்சை கேக்கவும் பார்க்கவும்
விரும்பாமல் போனீரோ.......
கட்டி அணைத்திடுங்கள்
கைத்தாளம் போட்டிடுங்கள்
கதைகள் நூறு கூறிடுங்கள்
கேட்டவற்றை தந்திடுங்கள்
இன்னும் இருக்கு எங்கள் ஆசை
எல்லாம் சொல்லுகிறோம்
ஒரு தடவை வருவீரோ......

**பேர்த்திகள்**
**கயல், தக்சிகா [போலந்து]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பிரியமச்சி............

என் மரியாதைக்குரிய மச்சி
முதன் முதலாய் உன்னைப்
பார்க்கின்றேன்
அந்த எண்பதுகளில்
இன்னமும் என் மனதில்
பதியப்பட்டிருக்கும்
ஞாபகங்கள் அவை
வசந்தங்கள் வாழ்த்தும் போது
உன் கிளையில் பூவானானே
என் குட்டிச் சித்தாவின் சின்னச்
குட்டித் தங்கச்சி
அவள் அழுகுரல்ச்சாரம்
அவ்வளவு சோகம்
அம்மாவின் அணைப்பறியாள்
தம்பியின் வாழ்வியல் சமநிலை அறியான்
முதல் கண்ட மகனின் முழுமை அறியாள்
மச்சி நீ ஒருவனே நிஜம் என்றிருந்தான்
சோகங்களிலே உச்ச
சோகம்
தொலைபேசியூடாக அவளின்
துடிப்பையறிந்துதான்
நீ அப்பப்போ பேசும் அரசியலும்
எந்த மனிதனையும் பேசி மயக்கும்
வசீகரமும்
இன்னமும் பல காலம்
நீண்டு கிடக்கும் இந்தப் பிரபஞ்சமனைத்தும்
என்றிருந்தேன்
வாசித்து முடிக்காத
குறைப்புத்தகம் மாதிரி
உன் நினைவுகள் ஒவ்வொன்றும்
என்னைத் துரத்தித் துரத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரட்டுதடா
எங்களுக்கெல்லாம்
எங்கள் அப்பா ஒரு சமுத்திரம்
என்று களித்திருக்க
எந்தத்துளி முதற்துளி
எந்தத்துளி கடைத்துளியென்று
தத்துவம் பேசுவதும்
தவிக்க விடுவதும்
நியாயமா மச்சி
காற்றில் ஆடி உரசும் ஊஞ்சலாய்
காதல் உணர்வும் கல்யாண நிகழ்வும்
உன் பிள்ளைகளின் வாழ்வில்
கொட்டி மகிழ
வாழ்வின் துளிர்விற்காய்
ஆரம்பிக்கயிலேயே
சோகங்களைத் தூவி நீ
தூங்கியதேனோ?
உனக்குள் உன் மூச்சு
உறங்கியது கேட்டவுடன்
எனக்குள் என் மூச்சு
எதையெதையோ சொல்லிற்று
தேடிக் கிடைத்த திரவமாய்ப் பார்த்தானே
தாயில்லா என் தங்கை தவிப்பாள் என்றறியாயோ?
இடிந்து போயுள்ளோம்
கடிந்து கொள்ளவா முடியும் காலனின்
முடிந்த முடிவை தலைவனை இழந்து
ஒடிந்து போயிருக்கும் என் சித்தப்பா
என் தங்கை, மருமக்கள், பேரமக்கள்
மற்றும் நம் உறவுகள் யாவற்கும்
நிறைந்த தைரியத்தை இறைவன் வழங்கட்டும்
எனப் பிரார்த்தித்து
இறையடி நிழலில் என் மச்சி இளைப்பாறவேண்டி
ஆத்மார்த்தமாய், ஆத்மசாந்திக்காய்
இறையருள் இறைஞ்சுவதோடு
திருமதி நல்லம்மா வேலுப்பிள்ளை குடும்பத்தினர
சார்பில் எங்களின் சோகங்களையும்
அனுதாபங்களையும் உங்களோடு பகிர்ந்து
கொள்கின்றோம்

பிரிவால் துயருறும்
கணேஷ் குடும்பம்–கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்வு

உருத்திரபுரத்தின்
உறவானவர்
உறவுகளுக்கெல்லாம்
சிறகானவர்
வருத்துவோரையும்
புன்னகையால்
வசமாக்கியவர்

இல்லறம் மகிழ்ந்து
இறை வரம் நிறைந்து
நிறைவளம் கண்ட
நாயகன்
திரு நிழலடி புகுந்தார்
என் மனதில் துயர்
தந்து
கலைந்தார்

நல்லானே!
நற்பணியின்
வல்லோனே
இப் பிறப்பின்
வாழ்வை கடந்து
இறை பிறப்பின்
ஞானம் புகுந்து
நற் பிறப்பாய் நாளை
பிறப்பாய்
எப் பிறப்பும் எம்மோடு
மலராய்
மலர்வாய்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**துயர்பகிர்வோன்**
**கலாகணேசன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவால் துயருறும் மச்சான்

என் விக்கி மச்சானுடைய மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த மன வேதனையும் அடைந்தேன். பசுமையான செட்டியூரிலே அவரோடு நான் வாழ்ந்த பசுமையான நினைவுகள் இன்றும் என் மனதில் நிழலாடுகின்றது. அவற்றை நினைத்துப் பார்க்கிறேன். "வாழ்க்கை ஒரு வழிப்பாதை" என்பார்கள். கடந்து வந்த அந்த ஒரு வழிப் பாதையை திரும்பிப் பார்க்கிறேன். பல்வேறு பிரச்சினைகளும் நெருக்கடிகளும் நிறைந்த அந்த காலப்பகுதியில் எம் பிரதேசத்திற்கு பல்வேறு சமூக சமயப்பணிகளையும் அரசியல் பணிகளையும் புத்திசாதுர்யமாக மிகச் சிறப்பாக செய்து காட்டியவர். பல்வேறு சூழ்நிலைகளில் எனக்கு நல் ஆசானாகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர். அவரது இழப்பு எனக்கும் எம் பிரதேசத்திற்கும் பேரிழப்பு அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாருடைய ஆத்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற வேண்டுகிறேன்.

ப. சசிகாந்தன்
அவுஸ்ரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பன் சிவா புலம்பல்

நாளொன்றை தவறவிட்டால்
நானிலத்தில் பயனில்லை
நல்ல நட்பொன்றை இழந்து விட்டால்
நாளிலொன்று பயனில்லை.

நட்பு என்பது மலரைப்போல் - அல்ல
ஒரு நாளில் பூத்து மறுநாள் உதிர்வதற்கு.......
உன் வீரம் பேச இங்கு வார்த்தைகளே இல்லையடா
நீ அஞ்சா சிங்கமடா அதனாலே தான் நீ அழிவில்லா
பொன்வானமடா........

என் அன்பின் இன்ப ஊற்றடா நீ என் அறிவின்
பொக்கிசமடா
உணக்கீடா இங்கு வேறுயாரடா
விக்கிணம் இல்லாத விக்கி அண்ணரே நீ
செல்லமாய் அழைத்த செந்தூரனாம் CDO விபரம்
சொன்ன செய்தியும் இதுதானே இதனாலே
அவர் நிலை குலைந்து தனை மறந்து நின்றதைத்தான்
நீர் கண்டீரோ?

அனுதினமும் கூட்டுறவாம் நாட்டுயர்வு என
ஓயாது உழைத்து வந்த உத்தமன்
நீ எங்கு சென்றாயடா.

விக்கி அண்ணன் விக்கி அண்ணன்
என ஓயாது உரைத்திருந்தும்
முதலும் முடிவுமாய் உங்களை நான்
நினைத்திருந்தும்
ஏப்பமிட்ட எமன் இவன் எங்கு தான்
உங்களை கொண்டு சென்றான்
என்ன வென்று நான் சொல்ல நண்பர்கள்
நாம் உனைத்தேடி தவிக்கின்றோம்
விக்கி அண்ணா

நீங்காத நினைவுகளுடன்
கந்தசாமி சிவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தர்மலிங்கம் விக்கினேஸ்வரன் (சமாதான நீதவான்)**
**பிறப்பு: 14.12.1959** **இறப்பு: 27.04.2018**

## விழிகள் வழிகின்றன

அன்பு தோழா! ஆருயிர் நண்பா! அண்ணா!-நீ
உன் மரணித்த செய்தி கேட்டு பட்டமரம் போல்
பதறி நிற்கின்றோம். அரசியலிலும் சரி! சமூக
தொண்டும் சரி சரித்திர நாயகனே உன்
தலைக்கு ஈடாக வேறு தலை உண்டா?

பாராளுமன்ற கதவுகளை
தட்டி பார்த்தவனே! திறந்து விடலாம் என எமக்கு
தென்பூட்டிய தலைவா நீ மடிந்தாய் என்ற
செய்தி கேட்டு மனம் உடைந்தது ஐயா!

அரசாங்கமும் அரசியலும்
சட்டமும் அசாதாரணம் என எமக்கு கற்றுக் கொடுத்த
தலைவா எந்த சவாலையும் எதிர் கொண்டு
வெல்லும் என்னவனே உம்மை இழந்து விட்டோமே!

சட்டம் என்றால் என்ன..... அரசியல் என்றால் என்ன....
அரசாங்கம் என்றால் என்ன.... சமூக தொண்டு என்றால் என்ன.
சமூக நீதி என்றால் என்னவென பிரித்து ஆராய்வு செய்து
துணிந்து செயல்பட செய்தவனே இனி நாம்
யாரை நாடுவோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

k. யோகன் குடும்பம்
A. குமரன் குடும்பம்
வரலஷ்மி இரான்ஸ் போட், சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கூட்டுறவுப்பணிகளின் சில பதிவுகள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்த்தியின் பிறந்த நாளுக்காய் அன்னாரால் எழுதப்பட்ட இறுதிக் கவி வரிகளில் இருந்து.....


இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

(1) ...

(2) ...

(3) ...

வாழ்க!

14-12-2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பொற் சுண்ணம்

முத்து நல் தாமம், பூ மாலை, தூக்கி
முளைக்குடம், தூபம், நல்தீபம், வைம்மின்!
சத்தியும், சோமியும், பார் - மகளும்
நா - மகளோடு பல்லாண்டு இசைமின்!
சித்தியும், கௌரியும், பார்ப்பதியும்,
கங்கையும், வந்து, கவரி கொள்மின்!
அத்தன், ஐயாறன், அம்மானைப் பாடி!
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

01

பூ வியல் வார் சடை எம்பிராற்கு,
பொன் திருச் சுண்ணம் இடிக்கவேண்டும்,
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்!
வம்மின்கள், வந்து, உடன் பாடுமின்கள்
கூவுமின், தொண்டர் புறம் நிலாமே:
குனிமின், தொழுமின் எம் கோன், எம் கூத்தன்,
தேவியும் தானும் வந்து, எம்மை ஆள,
செம் பொன் செய் சுண்ணம் இடித்தும், நாமே!

02

சுந்தர நீறு அணிந்து, மெழுகி,
தூய பொன் சிந்தி, நிதி பரப்பி,
இந்திரன் கற்பகம் நாட்டி, எங்கும்
எழில் சுடர் வைத்து, கொடி எடுமின்
அந்தரர் கோன், ஆயன் - தன் பெருமான்,
ஆழியான் நாதன், நல் வேலன் தாதை,
எம் தரம் ஆள் உமையாள் கொழுநற்கு,
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு அணிமின்கள், உலக்கை எல்லாம்
காப்பு அணிமின்கள், கறை உரலை
"நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக" என்று வாழ்த்தி,
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம் பொன் கோயில் பாடி,
பாச வினையைப் பறித்து நின்று,
பாடி, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

04

அறுகு எடுப்பார் அயனும், அரியும்
அன்றி, மற்று இந்திரனோடு, அமரர்,
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்,
நம்மில் பின்பு அல்லாது, எடுக்க ஒட்டோம்
செறிவு உடை மும் மதில் எய்த வில்லி,
திரு ஏகம்பன் செம் பொன் கோயில் பாடி,
முறுவல் செய் வாயினீர்! முக் கண் அப்பற்கு,

05

உலக்கை பலர் ஓச்சுவார் பெரியோர்,
உலகம் எல்லாம் உரல் போதாது என்றீரே
கலக்க அடியவர் வந்து நின்றார்,
காண உலகங்கள் போதாது என்றே
நலக்க, அடியோமை ஆண்டு கொண்டு
நாள் மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி,
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகம், தோள் வளை, ஆர்ப்ப - ஆர்ப்ப,
தொண்டர் - குழாம் எழுந்து ஆர்ப்ப - ஆர்ப்ப,
நாடவர் நம் - தம்மை ஆர்ப்ப - ஆர்ப்ப,
நாமும் அவர் - தம்மை ஆர்ப்ப - ஆர்ப்ப,
பாடகம் மெல் அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன், எங்கள் பரா - பரனுக்கு,
ஆடக மா மலை அன்ன கோவுக்கு,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும் நாமே!

07

வாள் தடம் கண் மட மங்கை நல்லீர்!
வரி வளை ஆர்ப்ப, வண் கொங்கை பொங்கே,
தோள் திரிமுண்டம் துதைந்து இலங்க,
"சோத்தும், பிரான்!" என்று சொல்லிச் சொல்லி,
நாள் கொண்ட நாள் மலர்ப் பாதம் காட்டி,
நாயின் கடைப்பட்ட நம்மை, இம்மை
ஆட் கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி,
ஆட பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

08

வையகம் எல்லாம் உரலதாக,
மா மேரு என்னும் உலக்கை நாட்டி,
மெய் எனும் மஞ்சள் நிறைய ஆட்டி,
மேதகு தென்னன், பெருந்துறையான்,
செய்ய திருவடி பாடிப் பாடி,
செம் பொன் உலக்கை வலக்கை பற்றி,
ஐயன், அணி தில்லைவாணனுக்கே,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து அணி கொள்கைகள் ஆட - ஆட,
மொய் குழல் வண்டினம் ஆட - ஆட,
சித்தம் சிவனொடும் ஆட - ஆட,
செம் கயல் கண் பனி ஆட - ஆட,
பித்தெம் பிரானொடும் ஆட - ஆட
அத்தன் கருணையொடு ஆட - ஆட,
ஆட பொற்சுண்ணம் இடித்தும், நாமே!
10

மாடு நகை வாள் நிலா எறிப்பு,
வாய் திறந்து அம் பவளம் துடிப்பு,
பாடுமின், நம் - தம்மை ஆண்டவாறும்,
பணி கொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின், எம்பெருமானை; தேடி,
சித்தம் களிப்ப, திகைத்து, தேறி
ஆடுமின்; அம்பலத்தானடிக்கு,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!
11

மை யமர் கண்டனை, வான நாடர்
மருந்தினை, மாணிக்கக் கூத்தன் - தன்னை,
ஐயனை, ஐயர் பிரானை, நம்மை
அகப்படுத்து ஆட் கொண்டு அருமை காட்டும்
பொய்யார் - தம் பொய்யினை, மெய்யர் மெய்யை;
போதரிக் கண்ணிணை, பொற் றொடித் தோள்,
பை யரவு அல்குல், மடந்தை - நல்லீர்!
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!
12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் இடை, செம் துவர் வாய், கரும் கண்,
வெள் நகை, பண் அம் பொன் மொழியீர்!
என்னுடைய ஆர் அமுது, எங்கள் அப்பன்,
எம்பெருமான், இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன்,
தமையன், எம் ஐயன தாள்கள் பாடி,
பொன்னுடைப் பூண் முலை மங்கை - நல்லீர்!
பொன், திருச் சுண்ணம் இடித்தும், நாமே!

13

சங்கம் அரற்ற, சிலம்பு ஒலிப்ப,
தாழ் குழல் சூழ்தரும் மாலை ஆட
செம் கனி வாய் இதழும் துடிப்ப,
சேயிழையீர்! சிவலோகம் பாடி
கங்கை இரப்ப அர இரைக்கும்
கற்றைச் சடை முடியான் கழற்கே,
பொங்கிய காதலின் கொங்கை பொங்க,
பொன் திருச் சுண்ணம் இடித்தும், நாமே!

14

ஞானக் கரும்பின் தெளியை, பாகை,
நாடற்கு அரிய நலத்தை, நந்தாத்
தேனை, பழச் சுவை ஆயினானை,
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை, பிறப்பு அறுத்து, ஆண்டுகொண்ட
கூத்தானை; நாத் தழும்பு ஏற வாழ்த்தி,
பானல் தடம் கண் மடந்தை - நல்லீர்!
பாடி, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும் வந்து, அன்பர் - தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி, விண்மேல்
தேவர் கனவிலும் கண்டு அறியாச்
செம் மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகன் ஏந்திய வெல் கொடியான்,
சிவபெருமான், புரம் செற்ற கொற்றச்
சேவலன், நாமங்கள் பாடிப் பாடி,
செம் பொன் செய் சுண்ணம் இடித்தும், நாமே!

16

ஏதேனகம் மா மலர்க் கொன்றை பாடி,
சிவபுரம் பாடி, திருச் சடைமேல்
வானகம் மா மதிப் பிள்ளை பாடி,
மால் விடை பாடி, வலக் கை ஏந்தும்
ஊனம் மா மழு, சூழும், பாடி,
உம்பரும் இம்பரும் உய்ய, அன்று,
போனகமாக, நஞ்சு உண்டல் பாடி,
பொன் திருச் சுண்ணம் இடித்தும், நாமே!

17

அயன் தலை கொண்டு செண்டு - ஆடல் பாடி,
அருக்கன் எயிறு பறித்தல் பாடி,
கயந் தலை கொண்று, உரி போர்த்தல் பாடி,
காலனைக் காலால் உதைத்தல் பாடி,
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி,
ஏழை அடியோமை ஆட்கொண்ட
நயம் தனை - பாடிநின்று - ஆடி - ஆடி,
நாதற்கு சுண்ணம் இடித்தும், நாமே!

18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி,
மத்தமும் பாடி, மதியும் பாடி,
சட்டர்கள் வாழும் தெல்தில்லை பாடி,
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடி,
கட்டிய மாசுணக் கச்சை பாடி,
கங்கணம் பாடி, கவித்த கைம்மேல்
இட்டுநின்று ஆடும் அரவம் பாடி,
ஈசற்கு, சுண்ணம் இடித்தும், நாமே!

19

வேதமும், வேள்வியும் ஆயினார்க்கு ;
மெய்மையும், பொய்மையும், ஆயினார்க்கு;
சோதியுமாய், இருள் ஆயினார்க்கு;
துன்பமுமாய், இன்பம் ஆயினார்க்கு;
பாதியுமாய், முற்றும் ஆயினார்க்கு;
பந்தமுமாய், வீடும் ஆயினருக்கு;
ஆதியும், அந்தமும் ஆயினருக்கு;
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!


20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமயப்பணிகளின் சில பதிவுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் முகத்தான்குளம் ஸ்ரீ சித்தி விக்கிநேஸ்வரர் ஆலயத்தில் அமரர் த.விக்கினேஸ்வரராசா அவர்கள் பரிபாலன சபையின் தலைவராக இருந்த காலப்பகுதியில் அண்ணாரின் அழைப்பின் பெயரில் கலாபூசனம், தமிழ்மணி, முல்லைமணி வே.சுப்ரமணியம் அவர்களால் பாடப்பட்ட திருஊஞ்சல் மற்றும் தலப்பதிகம்

## திருஊஞ்சல் பதிகம்

### காப்பு

உலகு புகழ் முகத்தான் குளத்தில் ஓர் பால்
ஓங்கார மாகவே திகழும் மூர்த்தி
அலகில் அருள் சுரக்கின்ற தெய்வமான
ஆனைமுகக் கடவுளைச் சென்னி வைத்து
பல தொழிலும் புரிவோர்கள் புகழ்ந்து ஏத்தும்
பான்மையுறு சித்தி விக்னேஸ்வரனின்
நிலவுலகில் ஊஞ்சலினை பாடுதற்கு
நிர்மலனாம் கணபதியே காப்பதாமே

### பதிகம்

அடியவரின் பக்தியினை துண்களாக
அன்பொழுகு உள்ளமுத் திரமதாக
வடிவு செட்டி குளமதுவே பீடமாக
வான்புகள் சேர்நான் மறைகள் கயிறதாக
படியினிலே வாழ்மாந்தர் விக்கினங்கள்
பறந்தோட கருணையினை சொரிந்து நிற்கும்
கடிகமளும் குழல்மாதம் உமையாள் மைந்தன்
கவின் சித்தி விக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்க
சகத்தினிலே தேவகணம் சூழ்ந்து போற்ற
இந்திரனும் இமையோரும் வடம் தொட்டாட்ட
எண்ணிலா அரம்பையர்கள் கீதம் பாட
வந்துநிதம் அடியார்கள் கரங்குவிக்க
வாழ்துகின்ற பேஉ ஒலிகள் விண்ணில் ஓங்க
சிந்தையிலே அன்பினையே யுடையோர் வாழ்த்த
ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்

பாதிமதி சூடிறைவன் கைலாயத்தில்
பார்வதியோ டோங்காரம் தன்னால் பார்க்க
பாதியொரு ஆண்யானை அடுத்தபாதி
பிடியாக இணைந்தவுடன் உதித்தபிள்ளை
பூதலத்தில் எக்கருமம் தொடங்க வேண்டின்
பூசிப்பார் முதலாக பிள்ளையாரை
சீதரனின் மருகோனே ஒற்றைக் கொம்பா
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்

மருதோடு ஆலமரம் பாலை தென்னை
மான்பு செறிபனை வேலமரமும்சூழப்
பெருஞ்சோலை மத்தியிலே கோயில் கொண்டு
பேரருளைச் சொரிகின்ற பிரணவத்தின்
ஒருமுதலே கணபதியே ஒப்பில் தேவே
ஓங்காரத்துப் பொருளேஉமையாள் மைந்தே
சிரமதனை பக்தர் குழாம் தாழ்த்தி நிற்கும்
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்

கல்லால மரத்தினிலே இரண்டுநாகம்
இருந்துன்னை வழிபாடு செய்யுமென்றும்
அல்லலினை போக்குகின்ற தெய்வமானாய்
அருகினிலேநாவல் தலவிருடசம் தன்னில்
நல்லகனி விளாம்பழமும் விரும்பியுண்பாய்
நான்மறைகள் புகழ்சிவனின் புதல்வனானாய்
செல்வா வாஎன்று உமை அழைக்கவந்தாய்
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் விருத்தியுற அறிவுபொங்க
விண்ணவரும் மண்ணவரும் போற்றிநிற்க
புவியினிலே மாதமும் மாரிபெய்ய
பொலிகின்ற உழவோடு தொழில்சிறக்க
கவிஞரது உள்ளத்தில் கலந்துநின்று
கற்பனையை தூண்டு ஞானக் கன்றேயாகி
சிவசுதனே பேழை வயிறுடைய கோவே
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்

அந்தனர்கள் வேதங்கள் ஓதுஓசை
அடியவர்கள் திருமுறைகள் பாடும் ஓசை
சந்தமும் பறவையினம் இசைக்குஓசை
சலசலத்துக்குளத்துநீர் ஓடும் ஓசை
மந்திகளு மரைமானும் எழுப்பும் ஓசை
மாதரார் இசை மழையைப் பொழியும்ஓசை
சிந்தையில் ஓங்காரத் துட்பொருளாம்
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்

பாசமொருஅங்குசமும் மழுவுந்தாங்கி
பாரதத்தை வெற்பினிலே பொறித்ததெய்வம்
நேசமொடுகரங்கூப்பிச் சிரத்தில்குட்டி
நின்னருளைப் பெறுவதற்காய் வருவர்மாந்தர்
வாசமலர் கொண்டுன்னை பூசிப்பார்கள்
வந்தித்து எண்ணியதை முற்றுவிப்பர்
தேசத்தில் வளங்கள் பல பொழியச்செய்யும்
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்

கயம் சூழும் முகத்தானின் குளத்திருக்கும்
கயமுகனே கற்பகத்தின் கொழுந்தே உன்னை
வலம்வந்து கும்பிடுவார் விக்கினங்கள்
வராமல் காப்பாய் நீ மும்மலத்தின்
பலம்நீக்கி முத்தியினை அருளுவிப்பாய்
முக்கணனே விநாயகனே ஓங்காரத்தின்
தலமானாய் விண்ணோரும் ஏத்துகின்ற
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவோடு பலதொழிலும் புரியும் மாந்தர்
உன்புகழை ஏத்திவட நான்தொட் டாட்ட மழலை மொழிக்
குழந்தைகளும் வடந்தொட்டாட்ட
மங்கை நல்லார் பக்தியுடன் நான் தெட்டாட்ட
பழ மறையை ஓதுவோர் வடந் தொட்டாட்ட
பண்ணிசைக்கும் பாவரனார் வடந்தொட் டாட்ட
சிலைவடிவில் வீற்றிருந்து கருணை பூக்கும்
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரா ஆடிரூஞ்சல்

### எச்சரிக்கை

ஓங்காரத் துட்பொருளே உமைமகனே எச்சரிக்கை
ஒளிவீசும் களிறேதனி முதலே எச்சரிக்கை
நீங்காவன்பு கொண்டபக்தர்க் கருள்வாய் எச்சரிக்கை
நிலமீதினில் முயல்வார் வளஊற்றேஎச்சரிக்கை
தேங்காய் சிதறிடவே வரமருள்வாய் எச்சரிக்கை
திசை யெங்கினும் மூஷிகத்தில் திரிவாய் எச்சரிக்கை
பாங்கில் உமையம்மையும் சிவனும் அருள் நோக்கால்
பாரில் உதித் தன்பஉதமைகாப்பாய் எச்சரிக்கை

### பராக்கு

ஆனை முகத்தேவே அருள்மழையே பராக்கு
ஐந்துகரம் தொநதிவயிறுடையாய் பராக்கு
ஞானத்திருச் சுடரேகுஞ் சரமேபராக்கு
நாவற்கனி உவந்தே யுண்ணும் நாதாபராக்கு
தேன்முத் தமிழ் ஔவைக்குமே ஈந்தாய் பராக்கு
தெருவோரமும் குளக்கட்டிலும் அமர்வாய் பராக்கு
கானத்தினில் முருகன் வள்ளிசேர்த்தாய் பராக்கு
கணநாதனாய் மிளிர்கின்றதோர் அமுதே பராக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பற்பாட்டு

ஏலைஏலோ தத்தெய்யாம் ஏலவலி
போகுதையா ஞானதீபகப்பல் - ஏலைஏலோ
ஐந்துபூதப் பலகையால் கப்பல் ஆக்கி
அதன் நடுவில் பிரணவப் பாய்மரம் நாட்டி
பந்திக்கும் மும்மலம் கயிறாகமாட்டி
பக்தரைக் கரைசேர்க்கும் திசையினைக் காட்டி
ஐந்தெழுத் தோதுவார் தன்னையே ஏற்றி
அழகானவீடெனும் பதந்தனை நோக்கி
எந்தை திருநாமங்கள் போற்றியே கப்பல்
ஈசனது அருள் துறையில் வந்தடைந்ததுவே

## மங்களம்

பருவமழை பெய்துஎன்றும் பார்விளைக மங்களம்
பாவை நல்லார்கற்பு நெறி பாரில்வெல்க மங்களம்
திருமகளும் கலைமகளும் சேர்ந்துவாழ்கமங்களம்
திசைகள் தோறும் சைவநெறி சிறந்து ஓங்க மங்களம்
உரிமையோடு தமிழர்வாழ்வு ஓங்க என்றும் மங்களம்
ஓம் எனும் பிரணவத்தின் ஒலிகள் ஓங்க மங்களம்
சித்திபுத்திநாயகனாம் சிவன்மகற்கு மங்களம்
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரபெருமானுக்கு மங்களம்

## முகத்தான்குளம் ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரர் ஆலயதலப் பதிகம்

ஈழத்தின் இதயமாய் இலங்குகின்ற
எழிலோங்கு வன்னியம் பதியிலோர்பால்
ஞாலத்தில் சிறந்த செட்டிகுளத்தில் மேவும்
நற்பதியாம் முகத்தான்குளம் என்னும் ஊரில்
சீலத்தால் உயந்திட்டமக்கட் காக
ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரர்கோயில் கொண்டார்
காலத்தால் அழியாத கருணையுள்ளார்
கற்பகமாய் என்றென்றும் திகழுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிகுளம் தனில் முதன்மைக் கிராமமாக
சிரியதாக காத்தான்குளம் விளங்கிப் பின்னர்
மட்டில்லா முகத்தான்குளம் எனும் பேரை
மான்புபெறத் தற்போது பெற்று நிற்கும்
அட்டதிக்கும் செந்நெல்லும் உழுந்தும் தேனும்
அவனிக்கு ஈந்துபுகழ் பரப்பிநிற்கும்
இஸ்டமுடன் இவ்வூரில் கோயில் கொண்டு
இக பரத்தின் இன்பமெல்லாம் சொரியும் தெய்வம்

மூர்த்திதலம் தீர்த்தமெனும் முச்சிறப்பும்
மூத்த பிள்ளையார் கோயில் தன்னில் உண்டு
கீர்த்தியுடன் அன்பருக்குஅருளைநல்கும்
கிடைப்பதற்கு அரியநற் பேறளிக்கும்
பார்த்தோர்க்கும் கேட்டோர்க்கும் பேசினோர்க்கும்
பானை வயிறுடையவனே விக்கினங்கள்
நேர்த்தியுடன் விலக்கியேசுகமளிப்பார்
நித்தமும்அவன் பாதம் போற்றுவோமே

பலசமய நெறியிலுள்ளோர் தாமும் நிந்தன்
பங்காளராகித் திருப்பணியில் சேர்ந்தார்
அலையெறியும் முகத்தான்குளம் வாகர்கட்(டி)ய
ஒலுக்குளமும் முதலியார்குளம் வவ் வாலை
எழிலுடைய கரம்பைக்குளம் இன்னோரன்ன
எத்தனையோ கயம்கள் நினைச் சூழ்ந்துநிற்கும்
கலைமிளிரும் சிலையாகி அன்பர் போற்றும்
பரிந்தளித்த விக்கிரகமாக நிற்பர்

ஈசான மூலையிலேதீர்த்தக் கேணி
இணையில்லா நாவல்மரம் தலவிருட்சம்
மாசில்லா கல்லாலும் கோயில் முன்னர்
மாபெரிய நிழலாகும் ஆதிசேடன்
பூசித்த பாங்கினையே நினைவுறுத்தல்
போல இரு நாகங்கள் வணாங்கும் உன்னை
பாசத்தால் மாணிக்க இடைக்காடரும்
பரிந்தளித்த விக்கிரகமாக நிற்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத நோய்தீர்த்த நின்பால் வந்து
திருநீற்று பார்வையுடன் நூலும் கட்டி
பாரினிலே பயன்பெற்றோர் எண்ணிறந்தோர்
பாம்பணியும் கண்டனது பழையகோயில்
மாரிதுர்கை வழிபாட்டுத் தலங்கள் எல்லாம்
மாண்புடனே ஆங்காங்கு நிலவும் உரில்
பாதிநிகர் வள்ளண்மை உடையமாந்தர்
பரிபாலித் தேயுன்னைப் பூசிப்பாரே

ஐந்துகரம் ஆனைமுகம் ஒற்றைக் கொம்பு
ஆகன்றதிருச் செவிகையில் மோதகங்கள்
தொந்தி வயிறதில் சர்பபம் விரலில் பாம்பு
தோன்று நாகபரணபூ ஷிதனாய் நின்றய்
பந்திக்கும் மலங்களினை அகற்றிவீடு
பேறதனைத் தருகின்ற தெய்வமானாய்
இந்தமண் உலகினிலே பெறும் பேறெல்லாம்
ஏல்லோர்க்கும் ஈகின்றமுதல்வனேநீ

உழவோடு பலதொழில்கள் புரியும் மாந்தர்
உந்தனது திருத்தலத்தில் வந்துசேர்ந்து
கலையழகு மிளிர்கின்ற நினதுதோற்றம்
கண்டுடனே கசிந்துருகி வணாங்கி நிற்பர்
வலையினால் ஆன்மாக்கள் என்னும் மீன்கள்
வளைந்து மேபிடிப்பது போல் பிள்ளையாரும்
நிலையான வாழ்வுதர அருளுகின்றார்
மேதினியில் விக்னேஸ்வரர்க் கீடுமுண்டோ

மேற்குதிசை நோக்கியே இருந்துகொண்டு
மேதினிக்கு அருள்வெள்ளம் சுரக்கின் றாய்த்
மேற்குலத்தோர் கீழானோர் ஏழைசெல்வர்
மேன்மையுறு சன்னிதியில் இல்லைஎன்றும்
பார்க்குமிடம் எங்கிலுமே நினதுதோற்றம்
பக்தர்களின் உள்ளத்தில் பிரகாசிக்கும்
மூத்தவனேஶ்ரீ சித்திவிக்நேஸ் வரா
முதலான பேரமுதே வந்திக்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழமுக நாயகனேவிக்னேஸ்வரா
விரும்பியுன்னைச் சேர்வோர்க்கு நலந்தருவாய்
வாழவழிகாட்டுகின்றாய் வீடுபேறு
வழங்குகின்றாய் வந்துன்னைவந்திப் போர்க்கு
மேழிதனைப் பிடிப்போஉக்குமுதலாம் தெய்வம்
மேன்மைதருகல்விக்கும் நீயேதெய்வம்
நாளும்உந்தன் தும்பிக்கைதன்னில் நாங்கள்
நம்பிக்கைவைத்துய்வோம் போற்றிபோற்றி


**முகத்தான்குளம் ஶ்ரீ சித்திவிக்நேஸ்வரர்ஆலயம்**

**ஆமைவிடம் : பிரதானவீதி,முகத்தான்குளம்,செட்டிகுளம்.**
**இறைவன் : ஶ்ரீ சித்திவிக்நேஸ்வரர்**
**தலவிருட்சம் : நாவல் மரம்**
**தீர்த்தம் : விக்கினநாசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவுடன்



தாய் மடியில் முத்தாய் — தாய் மண்ணில் வித்தாய்

1984.10.02 — 2008.06.26

## விக்னேஸ்வரராசா மூபிள்சன்

**(ஜெயசீலன்)**

மூத்தவனாய் பிறந்து தாய் நிலத்தின் விடிவுக்கென ஆகுதியாகி
ஆண்டுகள் பத்தாகிய போதும் உன் நினைவுகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி

ஆதிபற்றி
ஆராய்ந்து ஆராய்ந்து
களைத்துப் போயினர் விஞ்ஞான விலங்குகள்
ஆனாலும்
ஆழமாய் ஆழமாய்
போய்க்கொண்டிருப்பதால்
ஆதி எவராலும் அறியப்படாதபொருளே

ஒன்றைக் காட்டியே
இருவருமாய் கைகோர்த்து
சுற்றித்திரிந்தனராம் சும்மா
இந்த சோடிகளைத் தெரியும்தானே
சத்தியமாய் - இந்த
சாத்தியமற்ற கதையை நம்புவதற்கு
அறிவியல் தயாராக இல்லை
ஒரே நாளில்
உயிர்ச் சூழல் உருவாகியிருக்க முடியாது
என்கையால்
ஆதி மூலத்தால் உருவாக்கப்பட்ட
ஆதாம் ஏவாள் கதை
நல்ல கதையாகவே இருந்து விடுகிறது

அப்படியானால்
மனிதனின் ஆதியென்ன?
உயிர்ச் சூழலின் ஒரு கூறுதான்
மனித விலங்கும்
ஆதலால்
டார்வின் தாத்தா சொல்வதற்குக்
கட்டுப்படுவோம்
அப்படியென்னதான் தாத்தா சொல்கிறார்
மனிதர்கள் குரங்குகளாம்
மன்னிக்கவும்
மனிதர்களின் ஆதிகள் குரங்குகளாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம், வாய்ப்புக்கள் அதிகம் இருக்கு
மனிதனை மனிதன் சுரண்டுகின்ற குணம்
மரத்துக்கு மரம் தாவுகின்ற மனம்; இப்படி
மூதாதையரின் எச்சங்கள்
முதுசங்களாக எஞ்சியிருப்பதைப் பார்க்கையில்
டார்வின் சொன்னதில் தவறில்லைத்தான்

உயிர்ச் சூழலின் ஆதிக்கதை
சுவையானது
ஆதிமழையின் பொழிவுடன்
அந்தக்கதை ஆரம்பமாகிறது

சூரியனை விட்டு மெல்ல மெல்ல
விலகிடும் பூமியின்
சூடுதணிகிறது
குளிர்ந்து போன நீராவி நீர்த்துளியாய்
கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது
அய்யோ...
யாரையும் நனைக்காமல்
அந்தமழை வீணே பொழிகிறது
ஒற்றை உயிர்கூட இல்லை...

ஆதிமழையில் நனைந்துவிட
அந்த மழைத்துளிகள்
ஆறுகளால் தவழ்ந்தன - அந்த
ஆதிநதிகள் பள்ளங்களை நிரப்பி
கடல்களை உண்டாக்கின
கடல்கள் கை கோர்த்தன

சமுத்திரமாகியது
எஞ்சிய மேட்டுப்பகுதி
கண்டம் என்றாகியது
ஆதியில் கண்டங்கள் ஒற்றுமையாய் இருந்தன
அப்புறமாய்த்தான் மனிதபுத்திவந் தவை பிரிந்தன
ஆதிக்கண்டத்தை "லெமூறியா" என்பர்
தமிழில் குமரிக்கண்டம் என்றும்
குறிப்பிடுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனித்தான் ஆரம்பமாகிறது
உலகின் அழிவு
சமுத்திரத்தின் அடியில்
மனித மூதாதையர் உருவாகுகின்றனர்
ஆதவது
வேதியல் பொருட்களின் சேர்க்கை
உயிர்ப்பொருட்களாய் ஆயின
அப்போதுதான் ஆதி உயிரிகள்
அவதரிக்கின்றன

"ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாய்"
என்றபடி அலைகள் தாலாட்ட
கரையை அடைகின்றன
பச்சைய மணியை விழுங்கியவை
தாவரங்களாயும்
பட்டினி கிடந்தவை விலங்குகளாயும்
நிலத்தில் படர்ந்தன பரிமாணமடைந்தன

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாய்
குரங்காய் மனிதனாகிப் போகிறது
உயிர்ச்சூழல்
ஆதிமனிதனின் மொழிகள்
சைகைகளாகவே இருந்தன
ஆதிமனிதக் குடியிருப்புக்களான
குகைகளில் தம் உணர்வுகளைக்
கிறுக்கினார்கள்
இது மொழியின் முத்திரை வடிவம் என்பர்
மொழியியலாளர்கள்
இந்த முத்திரைகளின் பரிணாமம்
பேச்சாயும், எழுத்தாயும் மாறிப்போயின

ஐயோ... பேசிக்கொள்ளும் மனிதன்
பேசாமலே இருந்திருக்கலாம்

இன்று இறந்து போன
மொழிகள்
இலத்தீன், எளு, சமஸ்கிருதம், பாளி
என்பனவே! இவைதவிர பிராமி என்னும்
மொழியின்
வகை அண்மையில் அறியப்பட்டுள்ளது
ஏராளமாக மொழிகள் தோன்றி மறைந்தன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தோன்றி மணற்தோன்றாக் காலத்தின்
முன்தோன்றிய மூத்தத் தமிழின்
ஆதிவடிவமே - எளு
இந்த எளுவின் குழந்தைகுட்டிகள்
ஏராளம்
தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு,
இவையெல்வாம்
எளுவின் செல்லங்கள்

இசை
இதயம் தடவும் மயிலிறகு
இசையில் சில அரும்புகள் பூக்கின்றன
இசை கேட்டே சில உயிரினங்கள் உறங்குகின்றன
இசையின் ஆதியை
ஆராய்ந்துவிட முடியாது
உலகமே - "ம்" என்ற சுருதியில்த்தான்
சுழல்கிறது

புல்லாங்குழலின் புண்கள் கூட
புண்ணாகவரளி வாசிக்கும் என்பான் கவிஞன்

புல்லாங்குழலின்
ஆதிக்கதை புதுமையானது
இலைமூக்குகளின் வழியே
துளிகள் போடும் ஒரு மூங்கில்க்காடு
அந்த மூங்கில் காட்டின் வழியே
ஒரு ஞானி போய் வருகின்ற போதெல்லாம்
காற்று வந்தவன் காதுகளுக்குள்
கானம் ஊற்றிப்போகும்
அந்த இசைமூலத்தை தேடித்தேடி
அவன் தொலைந்து போனான்
இறுதியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டுகள் துளைத்த மூங்கில் துளைகளில்
காற்று ஊதி ஊதி
சுரம் வளர்ப்பதைக் கண்டறிந்தவன்
அன்றிலிருந்து
அவன் மட்டுமே கேட்ட இசையை
உலகம் கேட்கலாயிற்று

ஆதிமனிதன்
நெருப்பை அறிந்ததில் இருந்து
நவீன உலகின் கண்டுபிடிப்புகள்
ஆரம்பமாகிறது

ஆதிமனிதன்
ஒருபக்க கூரான கல்லை
மறுபக்கமும் கூராக்கினால்
இலகுவாக இறைச்சி கிழிக்கலாம்
என்பதைக் கண்டறியவே
ஐயாயிரம் ஆண்டுகளைச்
செலவு செய்தான்

உண்மையொன்றைச் சொல்லவா
நீதி, நியாயம், சத்தியம்
இறைமைத்தன்மை எல்லாவற்றின்
குறியீடாய்க் குறிக்கப்படும்
ஒளி இந்த உலகில் நிலையற்றது
சூரியன் இடையில் தோன்றினான்
சில காலம் சென்றபின்
தூர்ந்து போய்விடுவான்
இந்தப் பிரபஞ்சத்தின் ஆதி இருளாகும்
இருள் ஆதிமட்டுமல்ல அந்தமும்தான்

**மாவீரர் ஜெயசீலன்**
**[விக்கினேஸ்வரராசா முபிள்சன்]**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நம் மனம் உடைந்து போகும் வகையில் எம் குலவிளக்கு நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் அவர் உடல் நலனுக்காய் இறைவனைப் பிரார்த்தித்த அன்பர்களுக்கும் அவரது உடல் நலமடைய காலனோடு இறுதிவரைபோராடிய கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர், உத்தியோகத்தர்கள் ஆகியோரும் எமது துயரோடு கலந்து 20 நாட்களும் உடன் இருந்த கனகாம்பிகை உறவுகளுக்கும்

27.05.2018 அன்று எம் தலைவர் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு இடி விழுந்த பச்சை மரமாக கருகி நின்ற போது துணையாக நின்றவர்களுக்கும் பல வகைகளிலும் உதவி புரிந்த உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக துயரைப் பகிர்ந்த அனைவருக்கும் மரணச் செய்தியை மற்றவரோடு இணையத்தில் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் ஒலி பெருக்கி வாயிலாக அறிவித்தல் வழங்கிய முகத்தான் குளம் பிரசித்தி விக்கினேஸ்வர ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களுக்கும் குல தெய்வத்தினுடைய இறுதி யாத்திரையில் பங்கு கொண்டவர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள் வெளியிட்டவர்களுக்கும் இறுதி வணக்க உரை நிகழ்த்திய பெரியவர்களுக்கும் மலர்மாலை, மலர்வளையம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இந்த நினைவு மலரை வெளியிட அச்சிட்டு வடிவமைத்த பதிப்பகத்தாருக்கும் உள்ளத்திலிருந்து நன்றிகள் பல.

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு "



இங்ஙனம்
குடும்பத்தினர்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ம வம்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











சிவா பதிப்பகம், 05, கனகபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org